Registered as a Newspaper in Ceylon

**விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்:389

National Tamil Daily

மலர் 10
இதழ் 276
தேசிய தினசரி

சுக்கிலவருட ஐப்பசி 29 ஷஃபான் 22 வியாழக்கிழமை (14-11-68)

உருளைக்கிழங்கு
பயிர் செய்கைக்கு !

" பவர் "

| | | |
|---|---|---|
| விசேஷ உரம் | | ரூ. 27-00 |
| அல்றின்-25 | 16 அவுன்ஸ் | ரூ. 4-00 |
| எல்றின்-20 | 16 அவுன்ஸ் | ரூ. 7-50 |

வியாபாரிகளுக்கு விசேஷ கழிவுகள் கொடுக்கப்படும்.

சிலோன் மேர்ச்சன்ஸ் லிமி.,
ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்.
போன்: 234

## கச்சதீவு பிரச்னை:

# இலங்கை-இந்திய பிரதமர்கள் இம்மாதம் பேசுவர்

## திருமதி இந்திரா அறிவிப்பு

புதுடில்லி, நவ. 13

இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா இம்மாதம் பாரதத்துக்கு விஜயம் செய்யும்போது சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் கச்சதீவுப் பிரச்னைசம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்தப்படுமென பாரதப் பிரதமர்திருமதி இந்திராகாந்தி லோகசபையில்இன்று அறிவித்தார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே யாருக்குச் சொந்தம் என்ற சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் கச்சதீவு பற்றி எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த பின்னர் ஒருவர் கேட்டகேள்விக்குப் பதிலளிக்கையிலேயே திருமதி இந்திரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதமர் திரு. டட்லி இம்மாதம் 27-ம் திகதி இங்கு உத்தியோக பூர்வமான விஜயமொன்றைமேற்கொள்ளவிருக்கிறார்.

பேச்சுவார்த்தையின் போது கச்சதீவு விபரப் படங்கள் மற்றும் தஸ்தாவேஜுகள் ஆராயப்படும்.

## ரூ. 15 சம்பள உயர்வு கிடைக்கலாம்

கொழும்பு, புதன்

அரசாங்க சேவை ஊழியருக்கு 15 ரூபா சம்பள உயர்வு அளிப்பதற்கு மந்திரி சபைஆலோசனைசெய்து வருகிறது.

பிரதமர் திரு. டட்லி சேனநாயகா பாரதம் செல்லுமுன் இதுபற்றிஉத்தியோகபூர்வமாக அறிவிப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது.

பொருளாதார நிறுத்தக் கைத்தவிர்ப்பதற்காக இவ்விதயோசனைசெய்யப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

## இராமநாதனின் பணி நிறைவேறும் காலம் நெருங்கிவிட்டது என்கிறார் ஜி. ஜி.

அளவெட்டி புதன்

தமிழினத்தின் மாபெருந் தலைவரான சேர் பொன் இராமநாதனின் 'பணியை நிறைவேற்ற காலம் சென்ற முன்னைநாள் செனட்டர் நடேசனின் இந்துகலாச்சாரப் பல்கலைக் கழகத்தை யாழ்ப்பாணத்தில் நிறுவும் முயற்சியைத் தொடர்ந்து அதன் பொறுப்பை நான் மேற்கொண்டேன். இந்நடவடிக்கைக்கு அரசாங்கம் செவிசாய்த்தும் தமிழர் சிலரின் எதிர்ப்பாலேயே அம்முயற்சி தாமதமாகிவந்து. இருந்தும் அது விரைவில் நிறைவேறும்."

இவ்வாறு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு ஜி. ஜி. பொன்னம்பலம் நேற்று மாலைமல்லாகம் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற ஓர் ஆண்டுக் கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

மல்லாகம் இந்துசமய அபிவிருத்திச் சபை எட்டாவது ஆண்டுவிழாவும் சந்திநாற்றூண்டு ஐயந்தி விழாவும் மேற்படி சபைத் தலைவர் திரு அ. சரவணமுத்து தலைமையில் நடைபெற்ற போது பொன்னம்பலம் தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது:-

அரசாங்கம்பட்டசாலைகளை எடுத்த பின்பு எமது சமயம் பாதிக்கப்பட்டு வருகிறது. இதனைநிவர்த்தி செய்ய யாழ்நகரில் ஓர் இந்துப்பல்கலைக்கழகத்தை நிறுவ அனைவரும் ஒத்துழைப்பு தர வேண்டும்.

திரு ச. அம்பிகைபாகன் உட்பட மற்றும்பல மாணவ மாணவிகளும் பேசினர்.

### மத்திய சந்தை

குருநாகல், புதன்

குருநாகலில் புதிதாக ரூபா 10 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள மத்திய சந்தையை பிரதமர் திரு. டட்லி வரும் சனிக்கிழமை திறந்துவைப்பார்.

### அண்ணாவுடன் 20 நிமிடம்

சென்னை, நவ. 13

பாரதத்திலுள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷனர் திரு. ஜேம்ஸ் இன்று தமிழக முதல் அமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரையைச் சந்தித்து 20 நிமிட நேரம் பேச்சுவார்த்தை நடத்தினார்.

## வவுனியாவில் 40 பேர் கைது

வவுனியா, புதன்

வவுனியாவில் இன்று 40 பேர் கைது செய்யப்பட்டனர்.

திருட்டுக் குற்றங்கள் சம்பந்தமாகவே இவர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பி. இராமநாதன் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி இவர்களை இன்று கைது செய்தது.

### 1 கோடி டாலர் இலங்கைக்குகிடைக்கும்

வாஷிங்டன், புதன்

இலங்கையின் தெருக்களை திருத்துவதற்கும் வீதிகளை விஸ்தரிப்புச் செய்வதற்கும் உலகவங்கி இலங்கை அரசாங்கத்துக்கு 1 கோடி டாலர் உதவமுன்வந்துள்ளது.

# பாகிஸ்தான் முன்னாள் அமைச்சர் பூட்டோ கைது

கராச்சி; நவ. 13

பாகிஸ்தான் முன்னாள் வெளிநாட்டு அமைச்சர் ஜுல்பிகார் அலி பூட்டோ இன்று லாகூரில் கைது செய்யப்பட்டார். அவரும் மற்றும் 14 தலைவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் தேசிய சட்டசபை உறுப்பினரும் ஒருவர்.

பாகிஸ்தான் அதிபர் ஜனாப் அயூப்கானை சுட்டுக் கொலை செய்வதற்கு சென்ற ஞாயிற்றுக்கிழமை எடுக்கப்பட்ட முயற்சியின் எதிரொலியாகவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். கொலை முயற்சி சம்பந்தமாக இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டது தெரிந்ததே.

இவர்கள் கைது செய்யப்பட்டிருக்காவிடில் அமைதியும், ஒழுங்கும் பாகிஸ்தானில் குலைந்துகொண்டிருக்குமென்றும், இதனைத் தடுக்கும் நடவடிக்கையாகவே கைது செய்யப்பட்டார்களென்றும் மேற்கு பாகிஸ்தான் கவர்னர் முன்ஸா தெரிவித்தார்.

அரசியல்வாதிகளெனத் தம்மைக் கருதிக்கொண்டு சிலர் அமைதிக்கு உலை வைக்க முனைகிறார்களென்றும் அவர் ரேடியோவில் இது சம்பந்தமாக உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

அமைதிக்கு ... படும் விதத்தில் குழப்பம் ஏற்படுத்த முனைந்தாகவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்களெனவும் அறிவிக்கப்பட்டது.

ராவல்பிண்டி உட்பட பல நகரங்களில் அமைதியின்மை நிலவி வருகிறது.

இடதுசாரி மக்கள் கட்சியின் தலைவரான ஜனாப் பூட்டோமீது அரசாங்கத்துக்குச் சொந்தமான இயந்திரங்களைத் துஷ்பிரயோகம் செய்து 2 லட்சம் ரூபாவுக்கு மேல் கையாடியதாக லஞ்ச ஒழிப்பு நீதிமன்றத்தில் பொலிசார் சமீபத்தில் வழக்குத் தொடர்ந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

40 வயதான பூட்டோ 1958... 1960-ம் ... பாகிஸ்தான் வர்த்தக மந்திரியாகவும் 1963-ம் வருடத்திலிருந்து 1964-ம் வருடம் வரை பாதுகாப்பு வெளி விவகார அமைச்சராகவும் கடமையாற்றியிருந்தார்.

இவர் ஒக்ஸ்போர்ட், கலிபோர்னியா பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

1970-ம் வருடத்தில் பாகிஸ்தானில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி அயூப்கானுக்கு எதிராகப் போட்டியிட இவர் முனைந்து கொண்டிருக்கிறார். இவருக்குத் தண்டனைகிடைத்தால் ஜனாதிபதி தேர்தலில் இவர் போட்டியிட முடியாது.

### அபேட்சகர்களும் அவர்களின் திட்டங்களும்

யாழ்ப்பாண மாநகரசபைத்தேர்தலில்போட்டியிடும் அபேட்சகர்களின் அறிமுகமும், அவர்களின் திட்டங்களும் இன்று முதல் தொடர்ந்து வெளியாகும்.

[6ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். இ. போ. ச. சிற்றுண்டிச்சாலை கேள்விப்பத்திர அறிவித்தல்

கோண்டாவில் இ.போ.ச. டிப்போவிலுள்ள சிற்றுண்டிச் சாலையில் சாப்பாடு; சிற்றுண்டிவகைகள் முதலியன விநியோகம் செய்வதற்கு செலவுமதிப்பீடுகள் யாழ்ப்பாணம் இ.போ ச. பிராந்திய மனேஜரால் சீல்வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் மூலம் கோரப்படுகின்றன. ரூ. 10 கட்டுப்பணம் செலுத்தி பிராந்திய மனேஜரிடம் கேள்விப்பத்திர விண்ணப்பப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம். இக்கட்டுப்பணம் திருப்பிக்கொடுக்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 28-11-68-ம் திகதி பகல் 1 மணியுடன் முடிவடையும்.

பிரதேச முகாமையாளர்,
இ. போ. ச.
யாழ்ப்பாணம்.

1051

## காணி விற்பனைக்கு

மானிப்பாயில் கல்லுரோட்டொன்றில் வீடுகட்ட வசதியான 8 பரப்புக்காணி உடன் விற்பனைக்கு உண்டு. பரப்பு ரூ. 5000/-க்கு மேற்பட்ட அதிகம் கூடிய தொகை கைப்பணமாகக் கொடுப்பவருக்கு விற்கப்படும். வாங்குபவரின் சாதி, சமயம் பார்க்கப்படமாட்டா. வேண்டுமானால் நிலத்தை பிரித்தும் விற்கலாம். காணியை வாங்க விரும்பப்படுபவர்கள். எழுதவேண்டிய விவரம்:- 11/3, Schofield Place, Colombo 3.

1059


ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
நடித்த
தேர்த்திருவிழா

மானிப்பாய்
வெல்லி சினிமா
தினசரி 6-30, 9-30
பிரதி போயா, போயா 2-30
ஸ்ரீகாந்த் - ஜெயலலிதா
நடித்த
வெண்ணிறஆடை
ஈஸ்ட்மென்ட் கலர்


## வேலுப்பிள்ளைவீதி வேலையாரம்பம்

பருத்தித்துறை, புதன் கரவெட்டி வெல்லன் பகுதியிலுள்ள வேலுப்பிள்ளை வீதி சிரமதான மூலம் திருத்தியமைக்கப் படுவதற்கான வேலையை உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் ஆரம்பித்துவைத்தார். வடமராட்சிக் காரியாதிகாரி திரு எஸ். ஜெகநாதன், பருத்தித்துறை இலங்கை வங்கி அதிபர் திரு. வி.எஸ்.கந்தப்பு, கி. மு.ச. தலைவர் திரு எஸ். முருகப்பா ஆகியோர் இதிற்கலந்து கொண்டனர். முன்னாள் யாழ்.பிரதம தபாலதிபர் திரு.இ. வேலுப்பிள்ளையின் ஞாபகார்த்தமாக இவ்வீதி வெளியிடப்பட்டுள்ளது.


5-வது வாரம்
ஒல்லி
வினாயகா
★ எம். ஜி. ஆர். - ★ சரோஜாதேவி
இன்னும் பலர் நடித்த
ஆர். ஆர். பிக்சர்ஸ்
பறக்கும் பாவை
(ஈஸ்ட்மென் கலர்)

109-வது தினம்
லிடோ (கொழும்பு)
ராஜ்கபூர் — வைஜயந்திமாலா
நடித்த
சங்கம்
(டெக்னிக்கலர்)

கெப்பிட்டல்
2-00, 6-00, 9-30
சிவாஜி கணேசன் — சரோஜாதேவி
நடித்த
பாகப்பிரிவினை
(புதிய கொப்பி)

மைலன்
2-00, 6-00, 9-30
சிவாஜி கணேசன் — கே. ஆர். விஜயா
நடித்த
செல்வம்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
2-30, 6-30, 9-30
சிவாஜி கணேசன் — ஜெமினி கணேசன்
சாவித்திரி — தேவிகா
நடித்த
பாவமன்னிப்பு

ராஜ் (நீர்கொழும்பு)
ஜெய்சங்கர் — கே. ஆர். விஜயா
நடித்த
பொன்னான வாழ்வு


## மரநிழலில் வகுப்பு

பருத்தித்துறை, புதன் பருத்தித்துறைப் பகுதியிலுள்ள கலவன் பாடசாலையொன்றில் இடவசதியின்மை காரணமாக மாணவர் மர நிழலில் படிக்கவேண்டிய நிலைமை உருவாகியுள்ளது. மழை நாட்களில் சில வகுப்புகள் கற்பிக்கப்படுவதில்லையெனத் தெரிகிறது.

## இடமாற்றம்

பருத்தித்துறை, புதன் முல்லைத்தீவு அரசினர் உழவு இயந்திர நிலைய அதிபர் திரு. க. சிவனாதம் கிளிநொச்சி உழவு நிலைய அதிபராக மாற்றப்பட்டுள்ளார்.

## பருத்தித்துறை வாடிவீடு

பருத்தித்துறை, புதன் ரூபா 24,000 செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ள பருத்தித்துறை வாடிவீடு இவ்வாண்டில் இறுதியில் சம்பிரதாய முறைப்படி திறக்கப்படவிருக்கிறது. உல்லாசப் பிரயாணிகளுக்கான சகல நவீன வசதிகளுடனும் அமைந்த இவ் வாடி வீடு அநேகமாக உல்லாசப் பிரயாணப் பகுதியினரால் கையேற்கப் படலாமென்றும் தெரிய வருகிறது.


'ஈழநாடு'
10-வது ஆண்டு
நிறைவையொட்டி
'ஈழநாடு' ஸ்தாபனம்
நடாத்தும்
ஓரங்க
நாடகப்
போட்டி
தரமான இரு நாடகங்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும்.
1-வது பரிசு ரூபா 200
2-வது பரிசு ரூபா 100
ஓரங்க நாடகப்போட்டியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் தங்கள் படைப்புகளை 'ஈழநாடு' இதழில் வெளியாகும் இதற்கான கூப்பனுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
முடிவு திகதி
30-11-68

MANOHARA
JAFFNA
Daily at
4-45, 7&9-45p.m.
Rock Hudson
in
BLIND FOLD
[Color]

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
சிவாஜி—கே. ஆர். விஜயா
நடித்த
தங்கை

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி 6-30, 9-30
எம்.ஜி.ஆர்-சரோஜாதேவி
நடித்த
தாயைக் காத்த
தனயன்


# ஊர்காவற்றுறைச் செய்திகள்

### எதிரிகள் விடுதலை

நாரந்தனைக் கிராமத்தைச் சேர்ந்த சூசையப்பர் என்ற வாலிபரான சூசை அருளப்பு என்பவருக்கு மண்டைவெட்டியால் குத்தியும், இரும்புச்சலாகையால் அடித்தும் காயம் விளைவித்ததாக அதே ஊரைச்சேர்ந்த பிரகாசம்-அகஸ்தீன், சந்தியாகு-சவிரிமுத்து, கணபதிப்பிள்ளை-வீரசிங்கம், செபஸ்தியான் ராசா ஆகியோர் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதிபதி திரு. ஜமீல், சாட்சியங்கள் முரண்பாடு காரணமாக எதிரிகளை விடுதலை செய்தார்.

0 0 0

### ஆலோசனை சபையில் இடம்

வடமாகாணவியாபாரிகள் பாவனையாளர்களின் சங்கத்தை வியாபார ஆலோசனைச் சபையில் ஓர் அங்கமாக அரசாங்க அமைச்சு அங்கீகரித்துள்ளது.

வட இலங்கையிலுள்ள வியாபாரிகளினதும், பாவனையாளர்களினதும் குறைபாடுகளைப் போக்கும் நோக்கமாக இச்சங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

0 0 0

### முறையீடு

வடபகுதியிலுள்ள கூட்டுறவுக் கடைகளில் கட்டுறவுச் சங்கங்கள் நடாத்தும் சீமெந்து விநியோகத்தில் மோசடிகள் நடைபெறுவதாக வடமாகாண வியாபாரிகள்-பாவனையாளர்கள் சங்கம் சீமெந்து கூட்டுஸ்தாபனத்திற்குபுகார் செய்துள்ளதாம்.

### ஸ்தாபகர் தினவிழா

ஊர்காவற்றுறை, புதன் கரம்பொன் அமிர்தாம்புலம் ஸ்ரீசண்முகநாத மகா வித்தியாலயத்தின் ஸ்தாபகரான சுவாமி மகாதேவாவின் ஞாபகார்த்த விழாவை வித்தியாலய மாணவர்களும் ஆசிரியர்களும் கொண்டாடினர்.

0 0 0

### உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகள்

தீவுப்பகுதி விளையாட்டுக் கழகம் இம்மாதம் 18-ம் திகதி இரண்டாவது உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

'லைடன்' வெற்றிக் கேடயத்திற்காக முதலாவதுபிரிவு ஆட்டமும், காலஞ்சென்ற சமாதான நீதிபதி கருணூர் திரு. நல்லதம்பி ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்காக இரண்டாவதுபிரிவு ஆட்டமும் நடைபெறவிருக்கின்றன.

0 0 0

### கடனுதவி

தீவுப்பகுதியில் மாரிகால வெங்காயச் செய்கைக்கு விவசாயிகளுக்குக் கடனுதவி செய்ய வடபகுதி அரசாங்க அதிபர் முன்வந்துள்ளார்.

ஊர்காவற்றுறைக் காரியாதிகாரி கந்தோரில் நடைபெற்ற உணவு உற்பத்தி மகாநாட்டில் கலந்து கொண்ட யாழ்ப்பாண மேலதிக அரசாங்க அதிபர் 90,000 ரூபா தீவுப்பகுதி வெங்காயச் செய்கைக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

0 0 0

### 5-ம் வகுப்பு பரீட்சை

வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தினரால் நடத்தப்படும் 5-ம் வகுப்புப் பரீட்சை இம்மாதம் 26-ந் திகதி நடைபெறவிருக்கிறது. சுமார் ஒன்பதாயிரம் பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்குத் தோற்றுவார்கள்.

0 0 0

### இங்கிலாந்து சென்றார்

நெடுந்தீவுவாசியான திரு. தர்மரத்தினம் பொறியியல் உயர்தரக்கல்வி பயிலுவதற்கு விமானம் மூலம் இங்கிலாந்திற்குப் பயணமானார்.

நெடுந்தீவு தலைமையாசிரியர் திரு. நா. சுந்தரநாதம்பதிகளின் புத்திரரான இவர் கண்ணூர் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

0 0 0

### கிராமசேவகர் இடமாற்றம்

யாழ்ப்பாணம்— குருநகர் கிராமசேவகராகக் கடமையாற்றிய திரு. டொமினிக் பூநகரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பூநகரிப் பகுதியில் கடமையாற்றிய கிராமசேவகர் திரு. செபஸ்தியாம்பிள்ளை குருநகர் கிராமசேவகராக நியமனம் பெற்றுள்ளார்.

ஃ ஃ

### உபசபாநாயகரை வரவேற்க ஏற்பாடு

உடுப்பிட்டி எம். பியும், உபசபாநாயகருமான திரு. எம். சிவசிதம்பரத்திற்கு வேலணையில் வரவேற்பளிக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

வேலணைக் கிராமசபைத் தலைவர் திரு. பி. சுப்பிரமணியம், திரு. செ. க. நாயையா ஆகியோரைக் கொண்ட வரவேற்புக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.


வின்ஸர்
(புதிய கட்டிடம்) யாழ்ப்பாணம்.
தினசரி 2-30, 6-30, 9-45. போயா, பிரதிபோயா 10-30.
★ சிவாஜி கணேசன்
★ பத்மினி ★ K.R.விஜயா
★ நாகேஷ் ★ மனோரமா
நடித்த
இரு மலர்கள்
பல்கனி, றிசேவ்ட் ஆசனங்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட வியட்நாமுடன் ராணுவ விஷயங்களை பேச நாம் தயார்

## அரசியல் விஷயம் இரு வியட்நாமையும் பொறுத்தது

### அமெரிக்க பாதுகாப்பு மந்திரி விளக்கம்

வாஷிங்டன், நவ. 13

வியட்நாமில் அமைதியை ஏற்படுத்துவதற்காக பாரிஸில் விரிவான பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள தென்வியட்நாம் தொடர்ந்து மறுத்துவந்தாலும் கூட இராணுவ விஷயங்கள் பற்றி வடவியட்நாமுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு அமெரிக்கா தயாராக இருக்கிறது என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு கிளிபோர்ட் பத்திரிகை நிருபர்கள் மகாநாடொன்றில் நேற்றுத்தெரிவித்தார். வியட்நாமிலிருந்து இருதரப்பினரும் படைகளை விலக்கிக்கொள்வது சம்பந்தமாக வடவியட்நாமும் அமெரிக்காவும் பேச்சு வார்த்தை நடத்தலாமென்று அவர் சொன்னார். இராணுவவிஷயங்கள் பற்றித்தான் அமெரிக்காவும் வடவியட்நாமும் பேச்சு நடத்தலாமே தவிர அரசியல் பிரச்னை சம்பந்தமாக வட வியட்நாமும் தென் வியட்நாமும் தான் நேரடியாகப்பேசி ஒரு தீர்வு காணவேண்டுமென்றார் திரு கிளிபோர்ட்.

பாரிஸ் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்கு தென்வியட்நாம்தொடர்ந்து மறுத்து வருவது உடன்பாட்டை மீறிய செயலாகுமென்று தெரிவித்த திரு கிளிபோர்ட், பேச்சுக்களில் கலந்து கொள்வதற்குதென் வியட்நாமை உடன்படச் செய்வதற்கான முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும் சொன்னார்.

இராணுவ சூன்ய பிரதேசத்தில் வட வியட்நாம்படைகள் நுழைந்தது போர் ஒய்வு விதிகளை மீறியதாகாது என்று ஒரு நிருபர் கேட்டபோது விதிகளை மீறியதானாலும் வட வியட்நாம் மீதான குண்டு வீச்சை நிறுத்தும் அமெரிக்க அதிபரின் உத்தரவில் மாற்றம்செய்யவேண்டிய அளவுக்குப் பெரிய விஷயமாக இல்லை என்றும் திரு கிளிபோர்ட் தெரிவித்தார்.

# ஜோர்டான் - இஸ்ரேல் துருப்புக்கள் மோதல்

### அரபு உச்சி மகாநாட்டுக்கு மீண்டும் முயற்சி

அம்மான், நவ. 13

ஜோர்டான் நதிக்கு அருகே இஸ்ரேலியத் துருப்புகளுக்கும் ஜோர்டான் துருப்புக்களுக்குமிடையே நேற்று மூன்று தடவைகள் மோதல் ஏற்பட்டது. இதில் யந்திரத் துப்பாக்கிகள் உபயோகிக்கப்பட்டன. எத்தரப்பினருக்கும் உயிர்ச் சேதமேற்படவில்லை. பத்து நிமிஷம் வரை சண்டை நீடித்தது.

மேற்கு ஆசியா சம்பந்தமாக ஐ. நா. விசேஷ பிரதிநிதி டாக்டர் ஜாரிங்கின் முயற்சியில் முட்டுக்கட்டை ஏற்பட்டிருப்பதால் அடுத்து என்ன நடவடிக்கையை மேற்கொள்வதென்பது பற்றி அரபு நாடுகளுக்கிடையில் ஆலோசனை நடைபெற்றுவருகிறது. இதுபற்றி ஆராய்வதற்கு அரபு நாடுகளுக்கிடையில் மற்றோர் உச்சிமகாநாடொன்றைக் கூட்ட வேண்டுமெனச் சில அரபுத் தலைவர்கள் யோசனை தெரிவித்திருப்பதாகவும் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. ஆயினும் மற்றோர் அரபு உச்சி மகாநாடு உடனடியாக நடைபெறக்கூடிய சாத்தியமில்லையென்றும் கருதப்படுகிறது.

# “அணு ஆயுததடை ஒப்பந்தம் செய்வோம்”

### அமெரிக்காவுக்கு ரஷ்யா அழைப்பு

ஜெனிவா, நவ. 13

அணுஆயுதத்தை மட்டுப்படுத்துவதற்கான முயற்சியில் அமெரிக்காவுடன் சேர்ந்து உழைப்பதற்குச் சோவியத் யூனியன் தயாராக இருக்கிறதென்று சோவியத் பாதுகாப்பு அமைச்சர் மாலிக் அறிவித்திருக்கிறார்.

அணுஆயுத போர் அபாயத்தை நீக்கவேண்டியது அவசியமென்றும், இதற்காக அமெரிக்காவுடன் சேர்ந்து நடவடிக்கை எடுக்கச் சோவியத் யூனியன் தயாராக இருக்கிறதென்றும் திரு. மாலிக் கூறினார். அணுஆயுதப் பரவல்தடை ஒப்பந்தத்தில் அதிக நாடுகள் கைச்சாத்திட்டு வருவது நம்பிக்கையும், மகிழ்ச்சியுமளிப்பதாகச் சோவியத் அமைச்சர் தெரிவித்தார். அணுஆயுத உபயோகத்தைத் தடைசெய்வதற்கான ஒப்பந்தம் ஒன்றை உருவாக்க முன்வருமாறு அவர் அமெரிக்காவுக்கு மீண்டும் வேண்டுகோள் விடுத்தார்.

## இவர்களுக்கு 2 மாதமாக கிடைக்கவில்லையாம்

முல்லைத்தீவு, புதன்

முல்லைத்தீவிலிருந்து 22 மைல்களுக்கப்பால் உள்ள கொக்கிளாய் கிராமவாசிகளுக்கு சென்ற இருமாதங்களாக உணவுப் பொருட்கள் வழங்கப்படவில்லையாம். அங்கிருந்த ப. நோ. கூ. சங்கத்தினரால் நடாத்தப்பட்டுவந்த கடையை நடாத்தமுடியாதுபோனதே இதற்குக் காரணமெனச் சொல்லப்படுகிறது. முல்லைத்தீவுக் காரியாதிகாரி திரு. செ. கணேசநாதன் தற்போது அம்மக்களுக்கு அரிசியை வழங்க ஒழுங்கு செய்துள்ளார். இந்நிலை புதியதொரு தனிப்பட்ட உத்தரவு பெற்ற வியாபாரியை நியமிக்கும்வரை நீடிக்குமெனத் தெரிகிறது. இந்நிலையில் போக்குவரத்து வசதிகளின் பின்தங்கியுள்ள இக்கிராம மக்கள் உணவுப்பொருள் பெற [illegible]

## ‘ஜவஹர் ஜோதி’ செலவு

நேரு நினைவு காட்சி நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள ஜவஹர் ஜோதி அணையாமல் கவனித்துக் கொள்வதற்காக நாளொன்றுக்கு 66 ரூபாயும் அதற்கான வேலைகளைக் கவனிப்பதற்கு நான்குபேருக்குச் சம்பளமாக வருடம் 4,400 ரூபாயும் செலவிடப்படுவதாக உத்தியோகரீதியான புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

## பூரண ஒத்துழைப்பு அளிக்க தீர்மானம்

கொழும்பு, புதன்

தமிழ்மறை தந்து வையத்தோர் வாழ்வாங்கு வாழ வழிவகுத்த வள்ளுவர் தோன்றி இரண்டாயிரம் ஆண்டுகள் பூர்த்தியாகும் இவ்வேளையில் அப்பெரியாரை நினைவுகூருமுகமாக அவரின் உருவம் பொறிக்கப்பட்ட தபால்தலை ஒன்று வெளியிடப் பல திணைக்களங்களின் தமிழ் மன்றங்களும், தமிழறிஞர்களும், அன்பர்களும் மேற்கொள்ளும் இவ்வரிய முயற்சி வெற்றிபெறப் பூரண ஒத்துழைப்பையும், ஆதரவையும் நல்குவதென கூட்டு இறைவரித் திணைக்களத் தமிழ் இலக்கிய மன்றம் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

## மிகச் சிறிய ‘டேப்ரிகாடர்’

டோக்கியோ, நவ. 13

மிகச் சிறிய ‘டேப்ரிகாடர்’ ஒன்றை ஜப்பான் கம்பனியொன்று தயாரித்திருக்கிறது. ஒரு மணி நேரத்துக்கு தொடர்ந்து இயங்கக்கூடிய இந்த அழகிய கைக்கடக்கமான ‘டேப்ரிகாடர்’ மின்சாரத்திலும் பற்றறியிலும் இயங்கக்கூடியது. உலகத்திலேயே மிகச் சிறிய டேப்ரிகாடர் இது.

## புரட்சி இயக்கம்

லண்டன், நவ. 13

பாகிஸ்தான் புரட்சி இயக்கம் என ஓர் இயக்கம் லண்டனில் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வேறு வழி செய்ய வேண்டும் [illegible] கோரிக்கை கேட்டுள்ளனர்.

# ஒலிம்பிக்கை வீட்டில் இருந்தே பார்த்தனர்

ஸ்டட்கர்ட் [டாஸ்], நவ. 13

இந்த ஆண்டு மெக்சிகோ நாட்டில் நடைபெறும் ஒலிம்பிக் பந்தயத்தை ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் உள்ளவர்கள் தங்கள் வீட்டில் இருந்தே கண்டுகளித்தனர். அதுவும் வண்ணக் கோலத்தில் விளையாட்டுப் போட்டிகளை தத்ரூபமாகக் கண்டு ரசித்தனர். ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் வண்ண தொலைக்காட்சி நடைமுறைக்கு வந்துவிட்டதுதான் இதற்குக் காரணம். விண்வெளியில் பறக்கும் தகவல் தொடர்பு செயற்கைக்கோள் மூலம் சுமார் 1000 மைல்களுக்கப்பாலுள்ள மெக்ஸிகோவில் நடைபெறும் ஒலிம்பிக் பந்தய நிகழ்ச்சிகளை உள்கிரகித்து உலகின் பல வேறு பாகங்களிலும் தொலைக்காட்சிக் கருவிகள் வாயிலாக அவற்றைப் பிரதிபலிக்கச்செய்யும் பொறுப்பை மேற்கு ஜெர்மன் நிறுவனம் ஒன்று மேற்கொண்டிருந்தது.

## 43 இலங்கையர் பிரிட்டனில் குடியேறினர்

லண்டன், நவ. 13

மொத்தம் 43 இலங்கையர்கள் கடந்த செப்டெம்பர் மாதம் பிரிட்டனில் குடியேறியுள்ளனர். பிரிட்டிஷ் உள்துறை இலாகா இந்தத் தகவலை வெளியிட்டது.

பிரிட்டிஷ் தொழில் இலாகாவின் வேலை அனுமதிப்பத்திரங்கள் பெற்று பிரிட்டனில் நிரந்தரமாகக் குடியேறும் நோக்கத்துடன் பத்து இலங்கையர்கள் பிரிட்டனுக்கு வந்துள்ளதாயும் 33 பேர் பிரிட்டனிலுள்ள தம் இனத்தவரின் ஆதரவு நாடி வந்திருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

## 24 நாள் வாழ்ந்த மந்திரி சபை

பெய்ரூத், நவ. 13

லெபனான் மந்திரிசபை ராஜினாமாச் செய்துவிட்டது 24 நாட்களே ஆட்சிபீடத்திலிருந்த இந்த மந்திரிசபை ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து லெபனானில் மீண்டும் அரசியல் நெருக்கடி உருவாகியிருக்கிறது.

## கயானாவில் காந்தி சிலை

ஜோர்ஜ்டவுண், நவ. 13

காந்திஜயந்தி நூற்றாண்டு விழாவையொட்டி பிரிட்டிஷ்கயானாவின் தலைநகரான ஜோர்ஜ்டவுணில் காந்தி சிலையொன்றை நிறுவுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. எந்த இடத்தில் நிறுவுவதென்பது பின்னர் தீர்மானிக்கப்படும்.

## கட்சிக்கு நிதி நெருக்கடி

புதுடில்லி, நவ. 13

இந்திய சீன சார்புக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டிருக்கிறதாம். இதனால் கட்சி சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. கட்சிப் பத்திரிகையும் தனது பக்கங்களைக் குறைத்துள்ளது. [இன்ஃபா]

## அலுவலகத்துக்குள் விளையாட்டுத் திடல்

பெர்லின் [டாஸ்], நவ. 13

ஊழியர்கள் உற்சாகமாகவும் உடல் திடமாகவும் பணியாற்றுவதற்காக அலுவலகத்துக்குள்ளேயே குட்டி விளையாட்டுத் திடலை அமைக்கும் வழக்கம் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் உருவாகிவருகிறது. அலுவலகக் கட்டிடத்தில் ஒரு அறையையே ஒரு விளையாட்டுத் திடலாக்கி பல்வேறு விளையாட்டுக் கருவிகளையும் உடற்பயிற்சிக்கான சாதனங்களையும் அங்கு குவித்து வைக்கிறார்கள். அலுவலகத்துக்கு வரும் ஊழியர்கள் அன்றாடம் அலுவல்களுக்கிடையே அங்கு சென்று ஓடியாடி புத்துணர்ச்சி பெறுகிறார்கள்.

## இலங்கையர்களுக்கு கலாநிதிப் பட்டம்

லண்டன், நவ. 13

ஸ்கொட்லாந்திலுள்ள எடின்பேர்க் சர்வகலாசாலை சமீபத்தில் நடத்திய பட்டமளிப்புவிழாவில் இலங்கைப் பட்டதாரிகள் இருவருக்கு கலாநிதிப் பட்டங்கள் வழங்கப்பட்டன.

கொழும்பைச் சேர்ந்த திரு. சிவலிங்கம் மகாலிங்கம், கால்நடைகளின் சுவாச பிரதேச தொற்றுநோய்கள்பற்றி ஆராய்ச்சி அறிக்கை சமர்ப்பித்துகலாநிதிப் பட்டம்பெற்றார். அடுத்த இலங்கையரான லக்ஷ்மி சந்திரநாயக்க இலங்கைப் பட்டினங்களின் வரலாற்று அபிவிருத்திபற்றி ஒருபூமிசாத்திர விளக்க அறிக்கை சமர்ப்பித்து கலாநிதிப் பட்டம் பெற்றார்.

மூன்றாவது இலங்கையர் ஒருவருக்கு உஷ்ண வலய மிருக வைத்திய துறையில் டிப்ளோமா பட்டம் வழங்கப்பட்டது. இவர்தான் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த நமசிவாயம் பாலசுப்பிரமணியம்.

## கவிதைப் போட்டி

முடிவு திகதி 15—11—68

“ஈழநாடு” 10-வது ஆண்டுநிறைவையொட்டி ஈழநாடு ஸ்தாபனம் நடாத்தும் கவிதைப்போட்டி முடிவு திகதி 15-11-68ஆகும். இப்போட்டியில் முதலிரு சிறந்தகவிதைகளுக்கு 225 ரூபா பகிர்ந்தளிக்கப்படவிருக்கிறது. சிறந்த முதற்கவிதைக்கு 150 ரூபாவும், இரண்டாவது கவிதைக்கு 75 ரூபாவும் பரிசாக வழங்கப்படும்.

போட்டி முடிவுதிகதி 15-11-68

“ஈழநாடு” இதழில் வெளிவரும் இதற்கான கூப்பன் போட்டிக்கு அனுப்பப்படும் கவிதையுடன் இணைக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஸ் தாமதத்தினால் ஏற்படும் கேடுகள்

## பிரயாணிகள் சங்கக் கூட்டத்தில் கல்லூரி அதிபர் விளக்கம்

பண்டத்தரிப்பு, புதன்

"மணிக்கணக்காகப் பாடசாலை மாணவ மாணவியர் தெருவிலும் சந்திகளிலும் கடைகளிலும் பஸ்ஸைக் காத்துநிற்கவேண்டிய நிலையில் உள்ளனர். ஒழுங்கற்ற பஸ் சேவையே இதற்குக் காரணம். இதனால் மாணவர் தமது நேரத்தை வீணாக்குவதுடன் தமது புலன்களைத் தீயவழிகளில் செலுத்தவும் வழியேற்படுகிறது" என இளவாலை ஹென்றியரசர் கல்லூரியில் நடைபெற்ற சண்டிலிப்பாய் சேந்தான்குளம் பஸ் பிரயாணிகள் சங்க 15-வது வருடாந்தக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கல்லூரி அதிபர் வண. பிதா அல்பிரட் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் ஐந்து பெரிய பாடசாலைகளைக் கொண்ட இச்சங்க எல்லைக்குள் தினமும் நானூறுக்கும் மேற்பட்ட பிள்ளைகளும் 25க்கு மேற்பட்ட ஆசிரியர்களும் பஸ் மூலம் பாடசாலைக்கு வருகின்றனர். இவர்கள் பாடசாலைக்குப் பிந்திவருவதால் மற்றைய மாணவரும் கஷ்டமனுபவிக்கின்றனர். ஆலய வழிபாடுகளிலும் மக்கள் கஷ்டமே அனுபவிக்கின்றனர்" என்றார்.

அகில இலங்கைப் பிரயாணிகள் சங்கத்தலைவர் திரு. அபயசேகரா கொழும்பிலிருந்து இக்கூட்டத்திற்கு விசேட அழைப்பின் பேரில் சமுகமளித்திருந்தார். இ. போ. ச. மேலதிகாரிக்கு அழைப்புவிடுத்திருந்தும் அவர்கள் சமுகமளிக்காதது பற்றி கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

திரு. அபயசேகரவின் அபிப்பிராயப்படி சங்கத்தின் பெயரை சண்டிருப்பாய் — சேந்தான்குளம் பொது பிரயாணிகள் சங்கம் என்று மாற்றுவதாகவும் தீர்மானிக்கப்பட்டது. இதனால் பஸ் புகையிரதம், வான் போன்ற ஏனைய போக்குவரத்துகளையும் கவனிக்க முடியும் என்ற அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. அதிகமான பெண்களும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

பிரயாணிகள் சங்க நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர், திரு. ஆர். சவரிமுத்து, உபதலைவர்- திரு. எஸ். இ. எம். ஜோசவ், இணைக்காரியதரிசிகள்: திருவாளர்கள் எஸ். குமாரசாமி, சேவியர், தனாதிகாரி: திரு. எலஸ்.

18 பேரடங்கிய நிர்வாக சபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

---

## திருவிழா

யாழ்ப்பாணம், வியா.

அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார்கோவிலில் நாளை நடைபெறும் ஐப்பசி வெள்ளித் திருவிழாவை முன்னிட்டு விசேஷ ஆராதனைகள் நடைபெறும். இசைக்கச்சேரியும் சொற்பொழிவுகளும் இடம்பெறும்.

* * *

சுழிபுரம், புதன்

கடைசி ஐப்பசி வெள்ளியன்று வழக்கம்பரை அம்மன் கோவிலில் வழக்கமான கூட்டுப்பிரார்த்தனைகளுடன் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் உபந்நியாசமும் நடைபெறவிருக்கின்றன. வழக்கம்பரை ச. ச. பஜனைசபை இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

---

## இன்று திறப்பு விழா

முல்லைத்தீவு, புதன்

புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் விஞ்ஞான கூடத்தை நாளை 14-ம் திகதி காலை பத்து மணிக்கு வவுனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் திறந்து வைப்பார். மேலும் இதில் பிரதமவிருந்தினராக வடமாநில உதவி வித்தியாதிபதி திரு. தணிகாசலம், வவுனியா பிரதமவித்தியாதரிசி திரு. ஞானசேகரம் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

வித்தியாலய அதிபர் திரு. கு. வி. செல்லத்துரை வரவேற்புரை நிகழ்த்துவார். வட்டாரக் கல்வியதிகாரி திரு: செ. கந்தையா, வட்டார விஞ்ஞானக் கல்வியதிகாரி திரு. எம். அற்புதநாதன், புதுக்குடியிருப்பு வட்டாரக் கிளைச் சங்கத் தலைவர் திரு. சி. சிதம்பரப்பிள்ளை, பெ. ஆ. சங்க உபதலைவர், திரு. சி. கந்தையா, கிராமசேவையாளர் திரு. கா. தம்பிப்பிள்ளை, ஆசிரியர்கள் திரு. ச. சண்முகம், க. அரியரத்தினம் ஆகியோர் உரையாற்றுவர்.

---

## நாவலர் பேச்சுப் போட்டி

யாழ்ப்பாணம், வியா.

கொழும்பு கொம்பனித்தெரு சைவமுன்னேற்றச் சங்கம் அடுத்த மாதம் நடுப்பகுதியில் நாவலர் பேச்சுப் போட்டியொன்றினை நடாத்தவுள்ளது. இப்போட்டி மூன்று பிரிவாக நடைபெறும்.

---

## நன்னடத்தை பிணை

காலி, புதன்

சென்ற ஆண்டு மே 19ல் தன்னுடைய சொந்த மனைவியைக் கிணற்றுக்குள் வீசிக் கொலை செய்ய முயன்றதாக குற்றம் சாட்டப்பட்டிருந்த வழக்கு காலி அசைஸ் நீதிமன்ற நீதிபதி திரு. ஜி. ரி. சமரவிக்கிரம ஜூரி இல்லாமல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணை முடிவில் 200 செலுத்த உத்தரவிட்டு ஒருவருட நன்னடத்தைப் பிணையில் செல்லுமாறு நீதிபதி தீர்ப்பளித்தார். முடிக்குரிய தரப்பில் திரு. சுனில் சில்வாவும், எதிர் தரப்பில் திரு. மார்கரெட்டி [illegible] ஆஜரானார்கள்.

---

## புதிய உபதலைவர்

ஊர்காவற்றுறை, செவ்.

நாரந்தனை கிராமசபையின் உபதலைவராக திரு. எஸ். குருசாமி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி கிராமசபையின் மூன்றாம் வட்டார அங்கத்தவரான இவர் பல ஆண்டுகளாக தொடர்ந்து அங்கத்தவராக இருந்துவருகிறார்.

---

## யார் விலத்துவது?

இளவாலை, புதன்

யாழ்ப்பாணத்தின் கிராமப்புறங்களில் ஒடுக்கமான வீதிகள் மழை காரணமாக மேலும் ஒடுக்கமாகி வருவதால் போக்குவரத்துக் கஷ்டம் அதிகரிக்கிறது. குறிப்பாக பஸ் போன்ற வாகனப் போக்குவரத்துகளுக்கு இது மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது.

இதன்காரணமாக இருவழி சாரதிகளுக்கும் மாட்டு வண்டி சாரதிகளுக்குமிடையே பல தடவைகளில் யார் இடம்கொடுப்பது எனும் விஷயத்தில் தர்க்கம் மேற்பட்டு பிரயாணிகள் வீண் சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர்.

---

## திருடிய பொருளுடன் கைதானார்

அளவெட்டி, புதன்

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி என்பவருடைய வீட்டில் பணியாளராகவிருந்த நபர் பகலில் வீட்டிலே யாரும் இல்லாத சமயம் 1000 ரூபா பணமும். 420 ரூபா பெறுமதியான பொருட்கள் அடங்கிய பெட்டியும் களவாடிச் சென்றதாகப் பொலிசாருக்குத் தகவல் தெரிவித்ததைத் தொடர்ந்து பிரஸ்தாப நபர் சங்கானையில் வைத்துக் கைது செய்யப்பட்டார். திருட்டுப்போன பணமும் பொருளும் அவரிடமிருந்ததாகத் தெரிகிறது. விசாரணை நடைபெறுகிறது.

---

## மரணத்தில் சந்தேகம்

காலி, புதன்

ஹபரத்துவ பொலிஸ் வட்டாரத்தைச் சேர்ந்த ஏ. ஜி. கரலிஸ் என்னும் நடுத்தர மாது சென்ற ஏழாந்தேதி காலமானார். இவர் உணவில் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டிருக்கக் கூடுமென்னும் சந்தேகத்தால் றெக்ஸ் விக்கிரமசிங்கா என்பவர் செய்த புகாரைத் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டது. புலன் விசாரணையின்பின் ஜி. கே. ஹன்டி என்பவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

---

## கிராமசபை வரவு-செலவு

அளவெட்டி, புதன்

தெல்லிப்பழை கிராமசபையின் முதலாவது வரவு செலவுத் திட்டத்தை இம்மாதம் 17ந்திகதி கிராமசபைத் தலைவர் திரு. எல். சிதம்பரநாதன் சமர்ப்பிக்கவிருக்கிறார். இவ்வரவு செலவுத் திட்டத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் பல அடங்கியிருக்குமாம்.

---

## சிரமதானம் மூலம் திருத்தப்படும்

பண்டத்தரிப்பு, புதன்

தெல்லிப்பளை மேற்கு உபதபாற் கந்தோருக்கு அருகாமையிலுள்ள [illegible] [illegible] தெல்லிப்பளை இ. அ. [illegible] ஒழுங்கு செய்துள்ளது.

---

## பாடசாலை உதைபந்தாட்ட போட்டி சில முடிவுகள்

யாழ்ப்பாணம், வியா.

யாழ். பாடசாலை விளையாட்டுச்சங்கத்தினால் கல்லூரிகளிடையே நடாத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில், "பி" பிரிவுகளிடையே நடைபெற்ற போட்டிகளின் முடிவுகள் பின்வருமாறு:

### கொக்குவில் இந்து வெற்றி

கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும் பரமேஸ்வராக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில், கொக்குவில்கோஷ்டி மிக இலகுவாக, இடைவேளைக்குப் பின் அடுத்தடுத்து 5—0 கோல்களில் போட்டு எதிர்க்கோஷ்டியைத் தோற்கடித்தது. இப்போட்டிக்கு திரு. ஞானப்பிரகாசம் மத்தியஸ்தராகக்கடமையாற்றினார்.

### நடேஸ்வரா வெற்றி

நடேஸ்வராக் கல்லூரிக்கும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில், நடேஸ்வராக் கல்லூரி 2—0 கோல்களால் எதிர்க்கோஷ்டியைத் தோற்கடித்தது. நடேஸ்வராக் கோஷ்டியின் முன்னணி வீரர்களாகிய சிவம், அமுதராஜா ஆகியோர் முறையே ஒவ்வொரு கோலைப் போட்டனர். இப் போட்டிக்கு திரு. இம்மனுவேல் மத்தியஸ்தராகக்கடமையாற்றினார்.

### மகாஜனா வெற்றி

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரிக்கும், மானிப்பாய் இந்துக்கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் மகாஜனாக்கல்லூரி எதிர்க்கல்லூரியை 4—1 கோலால் தோற்கடித்தது. மகாஜனாக் கோஷ்டியின் வீரர்களான ராஜயசந்திரன். குமாரசாமி, ரவீந்திரன் ஆகியோர்முறையே 2, 1, 1 கோல்களைப்போட்டனர். இப் போட்டிக்கு திரு. சந்திரகுமாரராஜா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். [தே. நி]

---

## அரசாங்க ஊழியர் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ். அரசாங்க ஊழியர் விளையாட்டுச் சங்கம் அரசாங்க இலாகாக்களுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியை அடுத்தமாதம் 2ந் திகதி யாழ். விளையாட்டரங்கில் ஆரம்பிக்கிறது. இச்சுற்றுப் போட்டியை இம்முறை மிகவும் சிறப்பாக நடாத்த பல முன்னேற்பாடுகளை இச் சங்கக் காரியதரிசி திரு. குமாரசாமி செய்துள்ளார். இச் சுற்றுப்போட்டியின் முடிவில் இம்முறை ஓர் மாதிரி கோஷ்டியையும் தெரிவு செய்ய ஏற்பாடுகள் நடைபெற்றுள்ளது. திருவாளர்கள் சிவராசா. சுப்பிரமணியம், நாகமணி, பத்மநாதன் ஆகியோர் தெரிவுக் கோஷ்டியை தெரிவு செய்வதற்கு பொறுப்பாக இருப்பார்கள். [தே. நி]

---

### மாணவரை வென்றனர்

உடுப்பிட்டி, புதன்

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் கோஷ்டிக்கும் மேற்படி கல்லூரி மாணவர் மன்றக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டமொன்றில் 4—3-கோல்களால் ஆசிரியர்கள் வெற்றியீட்டினர்.

---

உதைபந்தாட்டம்

## அகில இலங்கை கோஷ்டியுடன் மோதுவர்

பருத்தித்துறை, புதன்

அகில இலங்கை உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் யாழ். பாடசாலைகள் உதைபந்தாட்டக் கோஷ்டி "ஏ" பிரிவு சம்பியன் கோஷ்டிக்குமிடையிலான போட்டியொன்று இம்மாதம் 18ம் திகதி யாழ். விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கிறது. இம்மாதம் 20ந் திகதி அகில இலங்கை உதைபந்தாட்டக் கோட்டி யாழ். கல்லூரிகளின் தேர்வுக் கோஷ்டியுடன் மோதும் இப்போட்டியும் யாழ். விளையாட்டரங்கில் நடைபெறும்.

---

## பிறைற் டைகர்ஸ் வெற்றி

உரும்பராய், புதன்

உரும்பராய் பிறைற் டைகர்ஸ் கிளப்பிற்கும் ஊரெழு பாரதி விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நேற்று நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் உரும்பராய் பிறைட்டைகர்ஸ் கிளப் 3—0 கோலால் வெற்றி பெற்றது.

உரும்பராய் இந்துக் கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. குமரேஸ்வரராஜா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

---

## வழக்குத் தொடரப்படுமாம்

உடுப்பிட்டி, புதன்

மயிலிட்டியைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியவர்கள் சங்கத்துக்குக் கட்டவேண்டிய கடனை உடனடியாகக் கட்டுமாறும் இல்லையேல் அவர்கள்மீது வழக்குத் தொடரப்படுமெனவும் உடுப்பிட்டிக் கிராமசபையின் 10-ம் வட்டார அங்கத்தவரும், சமற்படி சங்கக் கோர்ட்டுப் பிரதிநிதியுமான திரு. ஈஸ்வரலிங்கப் பெருமாள் அறிவித்துள்ளார்.

---

இன்னும் சில நாட்களே உள

'ஈழநாடு'

10-வது ஆண்டு நிறைவை யொட்டி

'ஈழநாடு' ஸ்தாபனம் நடாத்தும்

சிறுகதைப் போட்டி

முடிவு தினம் அண்மிவிட்டது.

தெரிவுசெய்யப்படும் இரு சிறந்த சிறுகதைகளுக்கு

ரூபா 300

பரிசாகப் பகிர்ந்து அளிக்கப்படும்.

1-வது பரிசு

ரூபா 200

2-வது பரிசு

ரூபா 100

"ஈழநாடு" இதழில் வெளியாகும் இதற்கான கூப்பன், போட்டிக்கு வரும் சிறுகதையுடன் இணைக்கப்படல்வேண்டும்

போட்டி முடிவு திகதி

15-11-68

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள நிர்ப்பந்தம் இவர்களுக்கு இல்லை

## பிரதமர் தமிழரசார் சந்திப்பின் பயன்

கொழும்பு புதன்

**தமிழ்த் தலைமை ஆசிரியர்கள் சிங்களத்தில் தேர்ச்சிபெற வேண்டுமென வற்புறுத்தப்பட மாட்டார்கள். சிங்களத்தில் தேர்ச்சிபெறாமலே அவர்கள் 60 வயதுவரை தலைமை ஆசிரியர்களாக தொடர்ந்து சேவை செய்யலாம்.**

பிரதமருடன் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் நேற்றிரவு நடாத்திய பேச்சுவார்த்தைகளின்போது இந்த உடன்பாடு ஏற்பட்டது.

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், செனட்டர் எம். திருச்செல்வம், திரு வி. என். நவரத்தினம், திரு அ. அமிர்தலிங்கம் ஆகியோர் தமிழரசுக் கட்சியின் சார்பிலும் பிரதமர் திரு டட்லி சேனநாயகா, ராஜாங்க அமைச்சர் திரு ஜே. ஆர். ஜயவர்த்தனா, கல்வி அமைச்சர் திரு ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை, நிதியமைச்சர் திரு யு. பி. வன்னிநாயகா ஆகியோர் அரசாங்கத்தின் சார்பிலும் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டனர். இரவு 9-30 மணிக்கு ஆரம்பமான இப் பேச்சுவார்த்தைகள் நள்ளிரவுக்குப் பின்னரும் நீடித்தது.

அரசாங்க ஊழியர்கள் சிங்களத் தேர்ச்சிப் பிரச்னை வடக்கு கிழக்கு மாகாண நிர்வாகமொழி மற்றும்பல வேறு பிரச்னைகள் குறித்து இரு தரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்தினர்.

பாடசாலை அதிபர்கள் சிங்களம் படிக்க வேண்டுமென்பதை இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டதாகவும் ஆனால் சிங்களம் படிக்காவிட்டால் அவர்கள் தண்டிக்கப்பட மாட்டார்களென்றும் 60 வயதுவரை அவர்கள் அதிபர்களாக சேவை செய்வதற்கு தடை இருக்கமாட்டாதென்று அரசாங்கத் தரப்பினர் உறுதியளித்ததாகவும் அறியப்படுகிறது.

அரசாங்க ஊழியர் சிங்களத்தில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனை சம்பந்தமாக விவாதிக்கப்பட்ட பொழுது, சிங்களத்தில் தேர்ச்சி பெறத்தவறிய அரசாங்க ஊழியர்களை சேவையிலிருந்து நீக்கக் கூடாதென்றும் அவர்கள் விஷயத்தில் மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ள வேண்டுமென்றும் தமிழரசுக் கட்சியினர் கேட்டுக் கொண்டதாகத் தெரிகிறது. சிங்களம் படிக்கவும் ஒரு தடவையாவது சிங்களத் தேர்ச்சிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கும் தவறியவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்காமல் விட முடியாது என்றும் அரசாங்கத் தரப்பினர் தெரிவித்ததாகவும் ஆனால் தேர்ச்சிப் பரீட்சைக்குத் தோற்றத் தவறியவர்கள் சேரப்பட்டுள்ள, அல்லது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள அரசாங்க ஊழியர் விஷயத்தில், அவர்கள் ஒவ்வொருவரும் விளக்கத்தையும், நிலைப்பத்தையும் தனித்தனியாகப் பரிசீலனை செய்து புனராலோசனை செய்வதற்குத் தயாராக இருப்பதாகவும் அரசாங்கத் தரப்பினர் உறுதியளித்தனராம். சிங்களத் தேர்ச்சிப் பரீட்சைக்குத் தோற்றத் தவறியவர்கள் அதற்காக மன்னிப்புக் கோரி, மீண்டும் சிங்களம் படித்து தேர்ச்சிப் பரீட்சைக்குத் தோற்றுவதாக உறுதியளிக்க வேண்டுமென்றும் அரசாங்கத் தரப்பினர் தெரிவித்தனர். இந்த அரசாங்க ஊழியர் விஷயத்தில் அநீதி இழைக்கப்படும் என்று அஞ்சத் தேவையில்லையென்றும் அரசாங்கத் தரப்பினர் உறுதியளித்தனர்.

அரசாங்க ஊழியர்கள் உத்தியோக மொழித் தேர்ச்சி சம்பந்தமாக திறைசேரி இதுவரை வெளியிட்ட சுற்று நிருபங்கள் மாற்றங்கள் ஏற்படுத்துவதாகத் தெரிவிக்கப் பட்டிருந்த கருத்தைத் தொடர்ந்து, நிலைமையைத் தெளிவாக்கும் புதிய சுற்று நிருபமொன்றை திறைசேரி வெளியிடுவதற்கு அரசாங்கம் ஒப்புக்கொண்டிருந்தது. இச் சுற்றுநிருபம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் வாசகம் சம்பந்தமாக தமிழரசுக் கட்சியினருக்கும் அரசாங்கத்துக்கும் சிலசில அம்சங்களில் வேறுபாடு இருந்தது. நேற்றிரவு நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது இந்த வேறுபாடு நீங்கி புதிய சுற்றுநிருபம் சம்பந்தமாக இருதரப்பினருக்கிடையிலும் உடன்பாடு ஏற்பட்டது. ஆனாலும் சுற்றுநிருபத்தின் வாசகம் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது. அதன் ஓர் அம்சம் கூட வெளியிடப்படவில்லை.

### தமிழில் நிர்வாகம்

தமிழ்மொழி உபயோகச் சட்ட விதிகளின் அமுலாக்கம் வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமிழில் நிர்வாகம் ஆகிய விஷயங்கள் பற்றியும் இரு தரப்பினருக்கு மிடையில் பேச்சு நடைபெற்றது. தமிழ்மொழி உபயோகச் சட்ட விதிகளை அமுல்நடாத்தவும் வடக்குகிழக்குப் பகுதிகளில் தமிழிலும் நிர்வாக வேலைகளைக் கவனிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென பிரதமரும் மற்றும் அமைச்சர்களும் உறுதியளித்ததாகவும் அறியப்படுகிறது.

நேற்றிரவு நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் சம்பந்தமாக தமிழரசுக்கட்சித் தலைவர்கள் திருப்தி தெரிவித்தனர்.

---

5 மாணவர்களுக்கு

### தடையுத்தரவு

உடுப்பிட்டி புதன்

வடமராட்சியிலுள்ள பிரபல பாடசாலையொன்றில் வகுப்பறையில் திடீரென பட்டாசு வெடித்தமை இங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இது சில மாணவர்களால் திட்டமிட்டுச் செய்யப்பட்டதாகக் கருதப்படுகிறது.

இது சம்பந்தமாக 5 மாணவர்கள் அதிபரால் எச்சரிக்கை செய்யப்பட்டதாகவும் 5 மாணவர்களுக்கு பாடசாலைக்கு வரவேண்டாமென தற்காலிக தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

## சந்திரனுக்கு மூவர்

நியூயோர்க், நவ. 13

சந்திரனை சுற்றிவருவதற்காக மூன்று விண்வெளி வீரர்களை கிறிஸ்மஸ் சமயத்தில் அமெரிக்கா விண்வெளிக்கு அனுப்பத் திட்டமிட்டிருக்கிறது.

டிசம்பர் 21-ம் திகதி கென்னடி முனையிலிருந்து 'அப்பொலோ' விண்வெளிக்கப்பலில் இந்த மூன்று விண்வெளி வீரர்களும் விண்வெளிக்கு அனுப்பப்படுவார்கள்.

பூமியிலிருந்து விண்வெளிக்குச் சென்றதும் முதலில் இரண்டுதடவை இந்த விண்வெளிக்கலம் பூமியைச் சுற்றிவரும். திட்டமிட்டபடி எல்லாம் சரியாக இருந்தால் திசையை மாற்றி சந்திரமண்டலத்தை நோக்கி 'அப்பொலோ' செல்லும் கிறிஸ்மஸ் தினத்தில் சந்திரனைச் சுற்றும் 'அப்பொலோ' பத்துத் தடவைகள் சந்திரனைச் சுற்றியபின் பசிபிக்கில் வந்து இறங்கும்.——

### ராமேஸ்வரத்துக்கருகில் எண்ணெய்?

சென்னை, நவ. 13

ராமேஸ்வரத்துக்கருகே எண்ணெய் கிடைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் கிடைத்துள்ளன. பூர்வாங்க ஆராய்ச்சிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

---

### விரைவில் கட்டடவேலை

அளவெட்டி புதன்

நவீன வசதிகளுடன் பல லட்ச ரூபாய் செலவில் தெல்லிப்பழையில் நிறுவப்பட இருக்கும் ஆயுள்வேத ஆஸ்பத்திரிக்கான கட்டட வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. முதலில் இங்கு ஆஸ்பத்திரி நிறுவப்படுமென்றும் அதன் பின்னர் உதனுடன் ஆயுள்வேத வைத்தியக் கல்லூரியும் நிறுவப்படுமெனவும் தெரிகின்றது.

## தற்கொலை செய்ய முயன்றவர் மீது வழக்கு

நல்லூர், புதன்

மனைவி தன்னுடன் வந்து இருக்க மறுத்ததைத் தொடர்ந்து தற்கொலை செய்ய முயன்றாராம் ஒருவர். இவர் தற்போது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அபாயநிலையைக் கடந்துவிட்டார்.

புத்தூரைச் சேர்ந்த செல்லையா நல்லையா என்பவரே டி. டி. ரி. மருந்தையும், மண்ணெண்ணையையும் கலந்து தற்கொலைசெய்துகொள்ளும் நோக்கத்துடன் அருந்தினாராம். நேற்றிரவு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் உடனடியாக அனுமதிக்கப்பட்டார்.

தற்கொலைசெய்ய முயன்றதாக இவர் மீது வழக்குத் தாக்கல்செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

## எதிரொலியை கவனிக்கிறது தமிழரசு வாலிப முன்னணி

நல்லூர் புதன்

அரசாங்கத்துடன் 'அரைகுறை' தொடர்புகளை முறித்துக் கொண்டு விடவேண்டுமென தமிழரசுக் கட்சியைக் கோருவதற்கு பிரதமர் - தமிழரசார் சந்திப்பின் முடிவுக்காகக் காத்திருக்கிறது. தமிழரசு வாலிப முன்னணி.

யாழ்ப்பாணம் தமிழரசுக் கட்சி தலைமை அலுவலகத்தில் கூடிய தமிழரசு வாலிப முன்னணி மேற்கண்ட முடிவைச் செய்து கொண்டது. வாலிப முன்னணி உபதலைவர் திரு. திருநாவுக்கரசு தலைமையில் நேற்று வாலிப முன்னணி கூடி பல்வேறு பிரச்னைகள் குறித்து ஆராய்ந்தது.

தமிழ் பல்கலைக் கழகம், புதிய அரசாங்க ஊழியர் பிரச்னை, தமிழ்மொழி உபயோக சட்டம் போன்ற விஷயங்கள் குறித்து தமிழரசார் பிரதமருடன் சந்தித்து பேசுவதால் அதன் எதிரொலியைக் கவனித்து அரசாங்கத்துக்குக் கொடுக்கும் 'அரைகுறை' முடிவுகளை துண்டித்துக் கொள்ள வேண்டுமெனக் கோருவதென கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

அடுத்த பொதுத் தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் தமிழரசுக் கட்சி அபேட்சகர்களை நிறுத்தும் போது பெரும் மாற்றம் செய்ய வேண்டுமெனக் கோருவதென்றும் வாலிப முன்னணி தீர்மானித்துக் கொண்டது.

யாழ் மாநகரசபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடுபவர்களுக்கு ஆதரவு தேடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## புதிய கட்சியின் லட்சியம்

யாழ்ப்பாணம் வியாழன்

டொமினிக் அந்தனியின் 'பூரண தமிழரசு' நிறுவி அதன் மூலம் தமிழ் மக்களின் ஆட்சி உரிமையை நிலைநாட்டுவதற்கு ஒரு இயக்கத்தை ஆரம்பிக்கவேண்டுமென நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் நடந்த ஆலோசனைக் கூட்டமொன்றில் தீர்மானிக்கப் பட்டது.

ஊர்காவற்றுறை எம். பி. திரு. வ. நவரத்தினம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் சுமார் 200 பேர் கலந்து கொண்டனர். இவர்களில் கூடுதலானோர் வாலிபர்களாவர். சில பட்டதாரிகளும், சிங்கள சட்டத்தால் வேலையிழந்த தமிழ் அரசாங்க ஊழியர்களும், இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தமிழரசுக் கட்சியை இந்தி சரியான பாதையில் அதனை வழிநடத்திச் செல்ல முயற்சிக்க வேண்டுமென ஊர்காவற்றுறை தொகுதியைச் சேர்ந்த சிலர் அபிப்பிராயம் தெரிவித்தனர்,

இக் கூட்டத்தில் கலந்து கொண்ட பெரும்பாலானோர் "தமிழ் நாடு நிறுவுவதுதான் ஒரேவழியென்றும், அதற்காக போராட வேண்டுமென்றும் கூறினார்கள்.

---

### வாள்வெட்டு

நல்லூர், புதன்

தகராறொன்றிலே ஏற்பட்ட சண்டை வாள்வெட்டில் முடிந்ததாம். வாள்வெட்டுக்கு ஆளானவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த மாணிக்கம் கணேஷ் என்பவரே காயங்களுக்கு ஆளானவராவர்.

ஆனைக்கோட்டையில் நடைபெற்ற இச்சம்பவம் சம்பந்தமாக சந்தேகத்தின்பேரில் சின்னட்டி ராசரத்தினம் என்பவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். ஆனைக்கோட்டை பொலிஸார் இதுசம்பந்தமாகபுலன் விசாரணை செய்கின்றனர்.

# 'மௌனமாக இருந்தால் உரிமைகள் புறக்கணிக்கப்பட்டன'

மருதனார்மடம், புதன்

"இதுவரை மௌனமாக இருந்ததன் விளைவாக நமது உரிமைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. ஆசிரியர் சங்கத் தலைவர்கள் கல்விப்பகுதியினரின் வேண்டுகோளுக்கு உரிமைகூட மறுக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் தொழிற் சங்கங்களை ஆலோசிக்காமலே, கல்வித்துறையைப் பாதிக்கக் கூடிய பல மாற்றங்களை அரசாங்கம் செய்துவருகிறது. கல்வியில் பெற்றோருக்கு நிரம்பிய அக்கறையுண்டு, அதிருப்தியுற்ற நிலையில் ஆசிரியர்கள் ஊட்டும் கல்வி பயன்தராதென்பதை அவர்களும் உணர்வார்கள் எனது ஒன்று திரண்டபலமே எமது வெற்றி.

[illegible] கித்தவர்களுக்கு அனுப்பி புள்ளதுண்டுப்பிரசுரமொன்றில் கூறுகிறது.

மேலும், பன்னிரு கோரிக்கைகளின் அடிப்படையில் மிக அண்மையில், மூன்று நாள் சுகயோசித லீவு எடுப்பதா, அன்றி ஒருநாள் அடையாள வேலைநிறுத்தமா என தமது விருப்பத்தைக் கொடுக்கப்பட்ட வாக்குச் சீட்டில் புள்ளடியிட்டனுப்புமாறு இச்சங்கம் தனது அங்கத்தவரை வேண்டியுள்ளது.

---

### 12 பேர் மாண்டனர்

திருவனந்தபுரம், நவ. 13

கேரளத்தில் இன்று நிகழ்ந்த பஸ் விபத்தில் 12 பேர் மாண்டனர். 75 பேர் காயமடைந்தனர். [illegible] றுக்கு மேற்பட்டோர் இந்த பஸ்ஸில் பிரயாணம் செய்துகொண்டிருந்தனர்.

### மரண அறிவித்தல்

வல்வெட்டித் துறையைச் சேர்ந்த திரு. V. S. குழந்தைவேலு இளைப்பாறிய தலைமைக் குமாஸ்தா (காங்கேசன்துறை துறைமுகம்) அவர்கள் காலமாகிவிட்டார். இவர் சிதாலெட்சுமியின் கணவரும், வேலாயுதம், செல்வராஜா, ஞானவேல், நவரெட்ணசோதி, பாலகுமார், கமலாதேவி, இந்திராதேவி, முத்துரத்தினம் ஆகியோரின் தந்தையும், சிவகுமாரன், துரைலிங்கம் அவர்களின் மாமனுமாவார். ஈமக்கிரியைகள் வல்வெட்டித்துறையில் இன்று காலை 8 மணிக்கு நடைபெறும். 160

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் கிறைக்காக யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org